මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: CGO/ASM/Policy/Cir/ (VOL II)
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2022.04.04

**ஆதன முகாமைத்துவ சுற்றுநிருப இல. 05/2022**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்
அரச வங்கிகள் மற்றும் அரச உடமை கம்பனிகளின் தலைவர்கள்
அனைவருக்கும்

## அரசாங்கத்தின் நிதியல்லா ஆதன முகாமைத்துவம்

## பொதுச் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதையும் கணாமற்போவதையும் தடுப்பதற்கு, அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களை முறையாகப் பதிவுசெய்து அறிக்கையிடல்

பொதுச் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதையும் கணாமற்போவதையும் தடுப்பதற்கும், பொதுச் சொத்துக்களை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கும், அரசாங்கத்தின் அனைத்து நிதியல்லாத சொத்துக்களையும் முறையாகப் பதிவுசெய்து அறிக்கையிடுவது அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களின் கட்டாயப் பணியாகும்.

02. அதற்கமைவாக அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களும் கீழ் கண்டவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. மேலும், உங்கள் கண்காணிப்பின் கீழுள்ள நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து நிதி அல்லாத சொத்துக்களின் தகவல்களும் புதுப்பிக்கப்பட்டு, ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கைகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி, கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

### I. அமைச்சர்கள் / இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் இராஜினாமா / பதவி நீக்கம்

அமைச்சர்கள் / இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் இராஜினாமா செய்தல் / பதவி நீக்கம் இடம்பெறுகின்ற சமயங்களில், அவர்கள் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்ட வாகனங்களுட்பட அனைத்து நிதி சாரா சொத்துகளையும் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் /மேலதிகச் செயலாளர் முறையாக கையகப்படுத்தல் வேண்டும்.

II. **அமைச்சுக்கள்/ இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் / மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் / ஏனைய நிறுவனங்களின் தலைவர்கள் அல்லது அனைத்து ஊழியர்களின் இராஜினாமா / பதவி நீக்கம் அல்லது இடமாற்றம்**

அமைச்சுக்கள்/ இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் / மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் / ஏனைய நிறுவனங்களின் தலைவர்கள் அல்லது அனைத்து ஊழியர்களின் இராஜினாமா / பதவி நீக்கம் அல்லது இடமாற்றம் போன்றன இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில், அவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட வாகனங்கள் உட்பட அனைத்து நிதி அல்லாத சொத்துக்களும் அந்த சொத்துக்களுக்குப் பொறுப்பான அலுவலரிடம் முறையாக ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதுடன், அத்தகைய சொத்துக்கள் முறையாகக் கையகப்படுத்தப்படுதலும் வேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட அலுவலரும், சொத்துக்களுக்குப் பொறுப்பான அலுவலரும், இராஜினாமா செய்த அல்லது இடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர், குறித்த நிறுவனத்துக்குச் சொந்தமான எந்தவொரு நிதி அல்லாத சொத்தினையும் எடுத்துச் செல்லவில்லை என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

III. **அமைச்சின் விடயப் பொறுப்பினை மாற்றுதல் அல்லது அரச நிறுவனங்களை ஒழித்தல் /மூடுதல்**

அமைச்சின் விடயப் பொறுப்புகள் மாற்றப்பட்டால், அந்த அமைச்சிற்கு சொந்தமான வாகனங்கள் உட்பட அனைத்து நிதி சாராத சொத்துக்களும் குறித்த விடயப் பொறுப்பு ஒதுக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட அமைச்சிடம் முறையாக ஒப்படைக்கப்படுதல் வேண்டும். பொது தொழில்முயற்சிகளை ஒழித்தல் / மூடுதல் போன்ற சந்தர்ப்பங்களில், குறித்த நிறுவனத்துக்குச் சொந்தமான நிதி அல்லாத சொத்துக்கள் அனைத்தும் தொடர்பாக, பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். ஏனைய அரச நிறுவனங்களை ஒழித்தல் / மூடுதல் போன்ற சந்தர்ப்பங்களில், குறித்த நிறுவனத்துக்குச் சொந்தமான நிதி அல்லாத சொத்துக்கள் அனைத்தும் தொடர்பாக, அதனோடு தொடர்புற்ற சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க / அமைச்சரவை முடிவுகளின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

03. மேலே பந்தி I, II மற்றும் III ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு விதிவிலக்குகள் காணப்படின், அது தொடர்பில் கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகத்திலிருந்து அறிவுறுத்தல்கள் / ஒப்புதல்கள் பெறப்படுதல் வேண்டும்.

**ஒப்பம்/ எஸ்.ஆர் ஆட்டிகல**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்